**IN THE COURT OF ADHOC – (II)**

**CITY CIVIL COURT, CHENNAI –104**

**OS. NO: 1873/2024**

**Deposition of: DW1** **DATE: 25.07.2025**

**NAME: M.மோசஸ் சந்தானம்**

**AGE: 49 Years**

**சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்:**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 4ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது சொந்த ஊர் மதுரை. நான் 1987ம் ஆண்டு சென்னைக்கு வந்தேன். நான் சென்னைக்கு வந்தபோது எனக்கு வயது 10. என் அப்பா மதுரையில் தான் இருந்தார். என் அப்பா பெயர் முத்தையன். என் அப்பா இந்து மதத்தை சார்ந்தவர் என்றால் சரி தான். நான் 10 வயதில் சென்னைக்கு வந்தபோது இந்துவாக தான் சென்னைக்கு வந்தேன். என் அப்பா மதுரையில் ஒரு விறகு கடையில் விறகு உடைக்கும் வேலை செய்து வந்தார். என் அப்பா என்னையும், என் தாயாரையும் அடித்து கவனிக்காமல் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. என் அம்மா, அப்பா இடையில் தகராறு இருந்தது என்றால் சரியல்ல. நான் சென்னைக்கு வந்தபோது எந்த வசதியும் வாய்ப்பும் இல்லாமல் சென்னைக்கு வந்தேன் என்றால் சரி தான். நான் சென்னையில் 32A, சந்திரபானு தெரு, புதுப்பேட்டை, சென்னை என்ற முகவரியில் உள்ள ராஜ்மோட்டார்ஸ் என்ற நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தேன் என்றால் சரியல்ல. எனக்கு எல்.வி.செல்வராஜ் என்பவரை தெரியாது. சென்னையில் 32A, சந்திரபானு தெரு, புதுப்பேட்டை, சென்னை என்ற முகவரியில் உள்ள ராஜ்மோட்டார்ஸ் என்ற நிறுவனம் எல்.வி.செல்வராஜ் என்பவருக்கு சொந்தமானது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

எல்.வி.செல்வராஜ் என்பவரிடம் தங்கமணி என்பவர் வேலை செய்தாரா என்றால் தங்கமணி என்பவரை தெரியும் அவர் வேலை செய்த விவரம் எனக்கு தெரியாது. தங்கமணி என்பவர் எங்கு வேலை செய்தார் என்று எனக்கு தெரியாது. நான் சென்னைக்கு வேலைக்கு வந்தபோது எனது பெயர் சந்தான வீரசேகரன் என்றால் சரி தான். என்னை எல்லாரும் சந்தானம் என்று கூப்பிடுவார்கள் என்றால் சரி தான். நான் கஷ்டப்பட்டு வயிற்றுப்பிழைப்புக்காக சென்னைக்கு வந்தேன் என்றால் சரி தான். தங்கமணி என்பவரிடம் நான் வேலை செய்ததற்கு என்னிடம் ஆதாரம் இல்லை. No.20. ஹாரிஸ் ரோடு, புதுப்பேட்டை, சென்னை என்ற முகவரியில் வேலை செய்தேன். அந்த கடை எல்.வி.செல்வராஜ் நாடார் என்பவருக்கு சொந்தமான ராஜ்மோட்டார்ஸ் என்றால் செல்வராஜ் என்பவரே எனக்கு தெரியாது. அந்த முகவரியில் ராஜ்மோட்டார்ஸ் என்ற கடை இல்லை. நான் வேலை செய்த கடையில் பழைய கார்களை உடைத்து அதில் உள்ள நல்ல பொருட்களை எடுத்து வியாபாரம் செய்வார்கள். தங்கமணி என்பவர் இந்துமதத்தை சேர்ந்தவரா என்று எனக்கு தெரியாது. தங்கமணி என்பவரிடம் வேலை செய்ததற்கு எந்த ஆதாரமும் என்னிடம் இல்லை. தங்கமணி என்பவர் செல்வராஜ் நாடாரிடம் வேலை செய்ததால் தங்கமணியும் கிறிஸ்துவ மதத்திற்கு மாறிவிட்டார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தங்கமணி தற்போது கிறிஸ்துவர். 1987ம் ஆண்டு நான் சென்னைக்கு வந்தபோது தங்கமணி இந்துவாக இருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. என்னை தங்கமணி தான் கிறிஸ்துவ மதத்திற்கு மாற்றினார் என்றால் சரியல்ல. 2004 அல்லது 2005ம் ஆண்டு நான் கிறிஸ்துவ மதத்திற்கு மாறினேன். நான் கிறிஸ்துவ மதத்திற்கு மாறியபோது என்னை ஒரு சர்ச்சில் வைத்து மதம் மாற்றினார்கள். தற்போது எனது பெயர் மோசஸ் சந்தானம் என்றால் சரி

தான். எனது பெயரை சூலையில் உள்ள செயின்ட் பால்ஸ் சர்ச்சில் வைத்து 2004 அல்லது 2005ம் ஆண்டு மாற்றினார்கள். நான் கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய விவரம் என் அப்பா அம்மாவிற்கு தெரியாது என்றால் சரி தான். 32A, சந்திரபானு தெரு, புதுப்பேட்டை, சென்னை என்ற முகவரியில் உள்ள கடைக்கு சென்றுள்ளேன். அந்த கடை 18x10 என்ற அடி உள்ள இடம் என்றால் சரி தான். அந்த கடையில் தரைத்தளமும் மேலே ஒரு ரூமும் உள்ளது என்றால் சரி தான். அந்த கடை பழைய கார்களை உடைத்து பொருட்களை விற்கும் கடை தான் என்றால் சரி தான். 32A, சந்திரபானு தெரு, புதுப்பேட்டை, சென்னை என்ற முகவரியில் உள்ள கடை எல்.வி.செல்வராஜ் நாடார் என்பவருக்கு சொந்தமானது என்றும், அவர் எனக்கு விலைக்கு தரமாட்டார் என்றும் எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த எல்.வி.செல்வராஜ் நாடார் கடையை தங்கமணி என்பவருக்கு கொடுக்கமாட்டார் என்றும், வேறொருவருக்கு விற்றுவிட்டார் என்றும் எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சென்னைக்கு வந்தபோது தங்கமணி கடை வைத்திருந்தார், அந்த கடையில் நான் வேலை செய்தேன். தங்கமணி No.20. ஹாரிஸ் ரோடு, புதுப்பேட்டை, சென்னை என்ற முகவரியில் கடை வைத்திருந்தார். அந்த கடை தங்கமணிக்கு சொந்தம் என்று நிரூபிக்கும் வகையில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)